கடவுள்துணை.

# நிகமநிச்சயம்.

இஃது

வேலூர் - ஆநந்தமேஸ்திரியவர்கள் பௌத்திரரும்

வே - ஆ - பொன்னப்பமேஸ்திரியவர்கள்

புத்திரரும்

ஆகிய

வே-பொ-திருவேங்கடமுதலியாரவர்களால்

இயற்றி

பேறை - செகநாதபிள்ளையவர்களால்

திருத்திப் புத்துரைசெய்விக்கப்பட்டுச்

சென்னை

ஊ· புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கிரச௵ புரட்டாசிமீ.

1872.

# நூன் முகம்

புலவீர்! இளமைப் பருவம் தொடங்கிக் கல்வியி ல் உள்ள என் விருப்பமானது பல இடையூற்றால் முற் றுப்பெறவில்லை. ஆயினும், அது நல அறிவாளர்கண் ணும், அத்துவைத நூலின்கணணும் என்னைப் பயில் வுற உய்த்தது. அது எல்லாவற்றலும் திருத்தியைத் தந்தும், பதிக்கு வேறாய்ப் பசு இன்றெனு உணரக்கக் கண்டு மனம் பொறாது விசிட்டாத்துவித சைவ, வை ணவ முதலிய பல சமயக் கொள்கைகளை ஆராய, அ வையும் அஃதொன்று நீங்க ஏனையவற்றுள் எல்லாம் ஏய எண்ணங்களால் ஆங்காங்குப் பொதியப் பட்டுள் ளவை ஓர்ந்து, பொதுவாகிய இயற்கை அறிவில் தோ ன்றிய எனது கருத்துக்களைச் சர்வமத சம்மதமாய் இ ருத்தற் பொருட்டுக் கத்திய உருவமாகவும், பின்னர் இலக்கணம் தேராமலே பழக்க வாசனையால் நேர்ந்தவ ழிப் பத்திய உருவமாகவும் இயற்றினன். ஆகவே இந் நூலைத் தொன்னூல் உணர்ந்தவர்களது நன்னூலுள் ஒ ன்றென்றே போற்றிக் கொள்ளுமாறு தங்கள் கனத் தைஅதிவிநயத் தோடும் பிரார்த்திக்கின்றேன்.

யான் சிகந்தராபாத்தில் வதிந்த அக்காலத்து எ னது ஆத்த சோதரருள் ஒருவரெனப் பெற்ற பேறை- செகநாதபிள்ளையவர்கள் இதனை நோக்கி ஆங்காங்கு இதனில் மிகுந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், சிதைந் தும் உள்ள பாடல்களை நன்குதிருத்திப் புத்துரையும் செய்து இந்நூலுக்கு "நிகமநிச்சயம்" எனப் பெயரும் தந்தனர்; இவரது நன் முயற்சிக்கு நன்றி யறிதலுடன் பல வந்தனம் தந்தனன்.

இங்ஙனம்,

வே பொ-திருவேங்கடம்.

கடவுள்துணை.

# நிகமநிச்சயம்.

## தனியன்.

நேரிசைவெண்பா.

சிற்றுயிர்காள் வேலூர்த் திருவேங்க டங்கலுடத்
தெற்றறுமா வோத திருசியனை—முற்றுணர்வின்
அச்சயனைக் காண்மா வறைந்த தமிழ்நிகம
நிச்சயம தைத்தேர்க நீர்.

(இதன் பொழிப்புரை.)

(உலகின்கண்) சில்வாழ்நாட்களையுடைய ஜனங்களே! நீங்கள், 'வேலூர்த்திருவேங்கடம்' (என்னும் இயற்பெயரையுடையோர்நமது) பாவமாகிய முடிச்சுகள் உடைபடும்படியாகவும், (வேதங்களால்) புகழப்பெற்ற அதிருசியன் என்னுந் திருநாமமுடையவனை, சருவக்கியத்துவமுள்ள அச்சயன் என்னுந் திருநாமமுடையவனை (அறிவால்) அறியும்படியாகவும் திராவிட பாஷையிற் சொன்ன "நிகமநிச்சயம்" என்னும் இந்நூலை ஆராயக் கடவீர் என்றவாறு.

[கடவுள் அதிருசியன்] என்றதால் அறிவால் அறியவேண்டும் என்பதுபெற்றாம்.

---

## நூல்.

காப்பு.

கலிவிருத்தம்.

சுகமு ஞானமுந் தூய்மையும் வாய்மையும்
அகநி லேநின் றருளிறை யைப்பராய்
நிகம நிச்சய மென்ன நிகழ்த்துவாம்
புகலு மாக்கள் புனிதத் திலங்கவே.

(பொ-ரை.) சொல்லப்பட்ட மானிடகோடிகள் பரிசுத்த த்தன்மையோடு (இம்மைமறுமையின்கண்) விளங்குதற்பொருட்டாகவே நிலையாக (எனது) உள்ளத்தின்கண்நின்று சுகத்தையும், ஞானத்தையும், சுத்தத்தன்மையையும், உண்மையையும், அருள்செய்கின்ற கடவுளைவணங்கி "நிகமநிச்சயம்" என்றுசொல்லப்பட்ட இந்நூலை உரைப்போம் எ-று. (க)

## அவையடக்கம்.

இதுவுமது

யாவுமே பொருளென மதிக்கும் வீட்சணர்
வேவுறக் காய்ந்திடார் விருப்பிற் கொள்ளுவார்
தீவழிப் புன்மையோ ரீதிற்செ யிர்க்கொளின்
ஆவதென் னழிவதென் னவர்மட் டாகுமே.

(பொ-ரை.) எல்லாவற்றையுமே பொருளாக மதிக்கின்ற (நல்ல) நோக்கத்தையுடையபெரியோர் (இந்நூல்) சிதைவுறும்படி வெறுதவர்களாகி (இதனை) விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளுவார்; தீயமார்க்கத்தில் உள்ள அற்பர்கள் இதிலிருக்கும் (குணத்தைப்பாராட்டாது) குற்றத்தைக் கொள்வார்களானால் அவ்வாறுகொள்வதனால் ஆகிவருவதுஎன்னை உள்ளது. இதிற் சிதைந்துபோவதுதான்என்னை (ஒன்றுமில்லை) மேலாகித்துன்பம்வருவதும், உள்ளதிற் குறைவதும் அவர்-அளவினதாகவே இருக்கும் எ-று. (உ)

## பெரியோர்களது பெருமை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எவனிது நலனீ தேதீ தெனப்பகுத் தறிவித் தாள்வோன், அவன்றனிப் பரம னென்று வழிகுற் றந்நலம் புரிந்தே, அவந்தரு கொடிதொ ரீஇயிவ் வவனியிற் பிறங்கு மாண்மைத், திவண்மனத் தவர்ப்பு கழ்ந்தே செப்புமொப் பில்லா வேதம்.

(பொ-ரை.) (தமக்கு யாதொருவிதத்திலும்) ஒப்பற்றிருக்கின்ற வேதங்களானவை, இது நல்லது, இது தீயதுவென்று (நம்மை) பகுத்தறியும்படிசெய்து ஆட்கொள்பவன் எவன்? அவனே ஒப்புயர்வற்ற ஏகநாயகன் எனத்தெரிந்துகொண்டு, அவனாற்கூறப்பட்ட நல்லகாரியங்களைச்செய்து பயனின்மையாகிய தீயகாரியங்களைச் செய்யாதொழிந்து, ஆண்தன்மையோடு இவ்வுலகின்கண் விளங்குகின்ற மிருதுவாகிய மனத்தையுடைய பெரியோரையே புகழ்ந்து சொல்லுகின்றன எ-று.

மிருதுவாகிய மனமென்றது, இரக்கத்தையுடைய மனமெனக்கொள்க. (௫)

நேரிசைவெண்பா.

ஏவ ருரைக்கிற்பா ரெங்கையருட் கேற்றமதி
மேவு மறிஞர் விதித்தவழி—மாவுலகம்
கற்று நடந்துங் கழறியுந் தீவினைகள்
அற்றுயர தேடுகின்ற தால்.

(பொ-ரை.) எமது பிரானாகிய கடவுளது தண்ணருட்குருகராக மதிக்கப் பெற்ற நல்லறிவாளர் கற்பித்தவிதமாகவே பெரிய உலகத்தில் உள்ள ஜனங்கள் தெரிந்துகொண்டும், (தெரிந்தவழி) நடந்தும், (தெரிந்துகொண்டதும் நடந்துகொண்டு வருவதுமாகிய வழியைப்பிறர்க்கு) தெரிவித்தும், (தமது) பாவங்களினின்றும் நீங்கி மோக்ஷத்தை யடையத் தேடுகின்றனர் ஆதலின், (அந்த நல்லறிவாளர்களது பெருமையை) யாவர்சொல்லமாட்டுவார்கள் எ-று. ஆல்-அசை.

இவ்விரண்டு பாட்டாலும் பெரியோர்களது பெருமையைமாத்திரமன்றி யவரது செய்கையையுங் குறித்ததால் அந்நடையே நமக்கும் உடன்பாடு என்றதாயிற்று; மதிக்கப்பெற்ற என்பது வேதங்களால்; இது முன்பாட்டில் விளக்கியதால் ஈண்டு விரிக்கிலம் என்றறிக. மதிமேவும் என்பதற்கு அறிவுடையரென்று பொருள் கூறுவார் பின்அறிஞரென வந்தமை யுணராதாரென அறிக. (௬)

அடியார்க்கெளியவ னருட்குடைமேவு
நெடியோனென்ன நிகழ்த்துகின்றது.

கலிவிருத்தம்.

தொடக்கமேமுதலாகச்சுரோசுரன்
மடத்தினேனைவிடுத்திலன்மண்ணில்யான்
அடுத்துளேனவனையவனடியனல்
விடப்படாமையுண்டாதலும்வேண்டுமே.

(பொ-ா.) உலகின்கண் தேவதேவன் அறியாமையோடு பொருந்திய என்னை ஆதி (=சிருட்டி) காலந்தொடங்கி விட்டு விட இல்லை; யான் அவனையே பற்றியிருக்கிறேன்; அவன் அடியேனல் விடப்படாம லிருக்கக்கடவன் எ-று. (ரு)

குறள் வெண்பா.

இருக்கை யுயிர்வாழ்கை யெல்லாம் பரனில்
இருக்கிற் குறையே தெமக்கு.

(பொ-ா.) (அடியேங்களது) இருப்பும், ஜீவிப்பும் (மற்றை யாவும் கடவுளிடத்ததாகவே இருப்பதால் எங்கட்கு யாது குறைவு உண்டு (ஒன்றுமில்லை) எ-று.

இவ்விரண்டு பாட்டானும் ஆத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் ஐக்கிய சம்பந்த முண்டெனக்குறித்ததாயிற்று. (சு)

சூனியவாதந் துடைத்தாத் திகத்தை
மாநிலவுயிர்க்கு வழுத்துகின்றது.

இதுவுமது.

இலகுகடங் காரகனை யேற்றிருப்ப தென்ன
உலகங் கடவு ளுடைத்து.

(பொ-ா.) விளங்குகின்ற கடமானது இயற்றுதற் கருத்தாவைப் பெற்றிருப்பது போல, உலகமானது கடவுளாகிய செய்பவனையுடையது எ-று. (எ)

## சால்கதிஞான நூல்களிவையெனல்.

நேரிசைவெண்பா.

பிரகதா ரண்யம் பிரஸ்னமூண்ட கந்தைத்
திரியீசங் கேனகடஞ் சேனைத் திரிய மொடு
மாண்டூகஞ் சாந்தோக்ய மன்னுமிப்பத் தும்பொ
ஆண்டா னுபநிடத மாம். [துவாம்

(பொ-ரை.) பிரகதாரண்யம்-க, பிரசனம்-உ, மூண்டகம்-ங, தைத்திரியம்-ச, ஈசம்-ரு, கேனம்-சு, கடம்-எ, ஐத்திரியம்-அ, மாண்டூகம்-கூ, சாந்தோக்கியம்-க0, ஆகிய இப்பத்தும் கடவுளைக் குறித்த சர்வமத சம்மதமாயுள்ள வேதசாரமாகிய நூல்கள் ஆகும் எ-று. (அ)

## ஜீவேசபேத மாவதிவை யெனல்.

இன்னிசைவெண்பா.

தொடுத்தமரத் திற்சேர் துணைப்புள்ளி லொன்று
படைக்கும் படைக்கப் படுமின் பளிக்கும்
பெறுமுற் றெடுசிற் றுணர்வுடைய தென்ன
அறிஞர் முறையறைகு வார்.

(பொ-ரை.) கிளைத்திருக்கின்ற மரம்ஒன்றில் வசிக்கின்ற பட்சிகள் இரண்டில், ஒன்று படைப்பது, (மற்றொன்று) படைக்கப்படுவது, (ஒன்று) இன்பத்தைத் தருவது, (மற்றொன்று அதைப்பெறுவது, (ஒன்று) சர்வஞ்ஞத்துவ முடையது (மற்றொன்று) கிஞ்ஞித்துவமுடையது, என்று பெரியோர்கள் முறையே சொல்லுவார்கள் எ-று.

இங்கு மரம் என்பது உடல். அதிற் கூடு என்னும் இதயம் தொக்குகின்றது. இரண்டுபட்சிகள்—பரமாத்மா, ஜீவாத்மாக்கள். (கூ)

இத்தகைத்தலமே கத்தனுபாசனைக்
குற்ற தென்ன மிழற்று கின்றது.

கலிநிலைத்துறை.

யாது சொற்றியப் பரமனை மனனித்தற் கிடமென்
றோது சீடனன் குறைப்பல் கேட் டுளத் திடை யமைக்க
தீதி லோசைநீர் காலுடைத்தாய்த் திகழ் சமனாய்
வேது றுத்தகு மணலதாய்த் தூயதாய் வேண்டும்.

(பொ-ரை.) அந்தக் கடவுளை உபாசிக்கத்தக்க தலம் எது சொல்லவேண்டும் என்று வினவிய நன்மாணாக்கனே (அதை) விளங்கச் சொல்லுகிறேன், தெரிந்துகொண்டு மனத்தில் நிலைபெறப் பதிக்கக் கடவாய். அவ்வுபாசனைக்குரிய இடம், ஓசை, நீர், காற்று இவைகளாற் குற்றமற்றதும், மேடுபள்ள மில்லாததும், சூடேறாததும், நுண்மணலில்லாததும் ஆகிய நல்ல மணற்றரையாயும், பரிசுத்தமுடையதாயுமிருக்கவேண்டும் எ-று.

மனம் மலினத்தை யடையாதிருத்தற்பொருட்டுக் குறித்த படி. (௪0)

மன்னுபாசனைநிலை பன்னுகின்றது.

இதுவுமது.

கண்ட மோடுரஞ் சிரமிவை கறுவுறுத் தகைய
தண்ட மேயென நிமிர்த்துடல் சொல்லரு நல்லோர்
அண்டர் நாயக னெனுந்துறைக் கருகுற மனனம்
கொண்டு தெப்பமா நீந்திடப் பவக்கடல் குறிப்பார்.

(பொ-ரை.) சொல்லுதற்கரிய நல்ல குணத்தை யுடைய பெரியோர் தேவதேவன் (=பரமபதம்) ஆகிய (நல்ல) துறையை அடையும் பொருட்டாக அசையாத தன்மையை உடைய (மரத்) தண்டத்தைப் போல உடலில் உள்ள மார்பு, கழுத்து, தலை ஆகியஇம் மூன்றையும் நிமிரும்படிச் செய்து தியானமாகிய தெப்பத்தைக்கொண்டு பாபமாகிய கடலைக் கடக்கும்படி மதிப்பார்கள் எ-று.

இவ்விதமாய் உபாஸநா காலத்தில் உட்காரப் பொறியின் செயல்களையும், மனத்தின் செயல்களையும், உள்ளத்தின் செயல்களையும் எளிதாய் அடக்கக்கூடும் என்றதாயிற்று. முந்தையவர் நெறியே நல்லோர்கள் இப்போழ்தும் இனிமேலுஞ் செய்வர்கள் என்னுங்கருத்தையடக்கிக் "குறிப்பார்" என்று எதிர்காலத்தாற் கூறினார். (கக)

பிரேய மொருவிச் சிரேய விடயம்
வல்லே கொள்ள னல்ல தென்றது.

இதுவுமது

புகல்பி ரேயமே பந்தமா மயக் கினிற் பொருத்தும்
திகழ்சி ரேய மோ பரற் றெரி தரும் வழி சேர்க்கும்
சுகமெ லாந்தரற் பாலதாஞ் சிரேயத்தைத் துணிந் தே
பகவ னார் விருப் பையுங் கண்டு சார்வரப் படிவோர்.

(பொ-ரை.) சொல்லுகின்ற பந்தமாகிய சமுசாரமென்னும் மயக்கிற் பொருத்துவது பிரேயமாகும். விளங்குகின்ற பரமேசுவரனை அறியத்தக்க (ஞான) மார்க்கத்திற் சேர்ப்பது சிரேயமாகும். ("சமுசாரமானது தமது திருப்பணிகளுள் ஒன்று" எனக் குறிப்பிக்கிற) அந்தக் கடவுளது விருப்பத்தையுந் தெரிந்துகொண்டு இம்மை மறுமைச் சுகங்களைக் கொடுக்குந் தன்மையதாகிய சிரேயகாரியங்களையே அந்தப் பெரியோர்கள் துணிந்து (செய்யச்) சேர்வார்கள் எ-று.

எல்லாம் என்றதால் இம்மை மறுமை வருவிக்கப்பட்டது. அப்படிவோர் என்பதில் உள்ள அகரம் முன்பாட்டைக் குறித்துநின்றது. (கஉ)

பிரணவமொழியினுக் குரைசெய்கின்றது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அவ்வெனும் பொருளே பரமனார் மகா
மறைதருஞ் சீவனிங் கிதனை

உவ்வதே தொழும்பு செய்யுமாப் பொருத்தி
யொப்பிலாப் பிரமத்தி லுய்க்கும்
இவ்வகை தெரிந்தோர் பிரணவ மறிந்தோ
ரிது மறைச் சம்மத மாகும்
செவ்விய லெனத்தே ராவிடி னிழிந்த
சென்துவாய்ச் செப்புவர் பெரியோர்.

(பொ-ரை.) அகாரத்திற்குப் பொருள் ஈசுவரன்; (சொல்லப்பட்ட) மகாரத்திற்குப்பொருள் ஜீவன்; இவ்வுலகின்கண் மகாரமாகிய ஜீவனை அகாரமாகிய ஈசுவரனுக்குத் திருத்தொண்டு செய்யும்படி; உகாரமானது செய்து ஒப்பில்லாத் தனிப் பெருமானிடத்திற் செலுத்தும். இது தான் வேதத்திற்குச் சம்மதமாகிய பொருளாகும். இந்தவகையைத் தெரிந்தவர்களே பிரணவமென்னும் மந்திரார்த்தத்தைத் தெரிந்தவர்களாவார்கள். (இதனைச்) செவ்விய (பெரியோர்களது) நடை என்று தேராராகில் அவர்களை அற்பசெந்துக்கள் என்றே பெரியோர் சொல்லுவார்கள் எ-று.

உகாரமானது, மகாரமாகிய ஜீவன் அகாரமாகிய ஈசுவரனுக்கு உரியதென்று காட்டுகிறது, என்று சிலர் பொருள்கூறுவார்; அது இதில் அமைந்தேயுள்ளது. (கரு)

வானடையத்தகு மானுடதருமக்
கட்டளையீதெனக் கட்டுரைக்கின்றது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

படைப்பிலடங்கு முடைக்குடிலத்து
வத்துவைத்தேவென மதித்திட னீத்துச்
சருவவல்லப நிருமலபூரணம்
ஆகியிடையீ றேது மிலாத
நித்தியப்பொருளையே கத்த னெனக்கொடு
தோத்திரம்புரிக தோத்திரம்புரிக

மூத்தகசகத்தீர் தோத்திரம்புரிக;
தந்தையவனெனச் சிந்தையுண்மதித்து
நுமதுநடையுடை வமிசசீவன
நிலையின்விகற்ப நிலையையுணர்ந்து
பேதத்தெறாத பேதத்துன்னி
மாதரணியரைச் சோதரரிற்கொளல்
ஏதமிலன்பொடு சோதரரிற்கொளல்;
கள்ளமாரீச வுள்ள மொருவித்
தந்திரவார்த்தையை நிந்தையசத்தை
உந்தியே யென்று முந்தை யவர்வழிப்
பொய்யைவனைந்தே மெய்யையுரைக்க
வையத் தீரோ மெய்யையுரைக்க;
தீங்குசெய்வா ரோங்கிக்குலையா
தரும்பசியினர்க்கு விரும்பியன்னமும்
தாகமுளோர்க்குச் சாகத்துதகமும்
நோயி னுந்துளார்க் கேயநன்மருந்தும்
வறிஞர்க்கும்மிம் செறிதருகாசும்
வித்தையிலார்க்கது முற்றுற வோதலும்
பத்தியிலார்க்கது பற்றுற வியற்றலும்
வல்லே செய்து நல்லராயிருமின்
எல்லவருக்குமே நல்லராயிருமின்
பிறாதுசெல்வ முறுமகிழ்வோடு
பெருமைகெடுப்பான் கருதாதவர்தமக்
குரியவெரியென வொருவி வொதுங்கித்
தேயத்துள்ளே ஞாயத்தொழுகுக
தூயநெறியினின் ஞாயத்தொழுகுக
பழிசொலி னினிய மொழிசொலித் தழீஇ
வைதிடினதற்கெதிர் வைதிடாதேதுவாம்

பகைக்குஞ்சினங்கொளா துகப்பையடைந்தே
தறையிலென்றும் பொறுமைபெறுக
இறையுங்கறுவாப் பொறுமைபெறுக;
குணம்வடிவுணரினு மணமகளல ளேற்
பார்வையினிணைவி லார்விருப் பொழித்து
விஞ்சியெழுந்துறு நெஞ்சையடக்குக
நஞ்சினுங் கொடிய நெஞ்சையடக்குக;
அன்னை தந்தையனை முன்னவ னென்று
வணங்கிக் குருசொற் கிணங்கிப் பணிந்து
விண் ணெறிபுகலும் பண்ணவர் புலவர்
மூத்தவரிவர்க்குச் சேர்த்துமுன் வந்தனை
சோதரரிடத்து மாதயை நிறுவி
மக்களைத் தமமி னொக்கவாதரித்துங்
கண்ணிணை நோக்கென மண்ணிடை நுந்தம்
இல்லறம்புரிக வில்லறம்புரிக
அல்லது நல்லற மன்றெனமொழிவரோ

(பொ-ரை.) சிருட்டியிலடங்கிய புலால் நாற்றத்தையுடைய சரீரத்தைப் பொருந்திய பொருள்களை யெல்லாம் "கடவுள்" என ஒப்பிடுதலை நீக்கிச் சர்வவல்லமை, களங்கரகிதம், எங்கும் நிறைந்ததன்மை, ஆதிமத்தியாந்தரகிதம் ஆகிய இலட்சணங்களை யுடைய நித்தியமாக வுள்ளபொருள் ஒன்றையே "கடவுள்" என்று அறிந்து உபாசிக்கக்கடவீர்; உபாசிக்கக் கடவீர்; பழமையான உலகத்தவர்களே உபாசிக்கக் கடவீர்.

அந்தக் கடவுளைப் பொதுவான தந்தையாக மதித்து, (உலகத்தில் உள்ள ஜனங்காள்) உங்களது நடையிலும், உடையிலும், வமிசத்திலும், ஜீவன நிலையிலும் வேறுபட்டிருப்பதைக் கண்டு அந்நியராக எண்ணுமல் பேதமற்றதன்மையோடு நினைத்து அவர்களைச் சகோதரராகக் கொள்ளக் கடவீர். குற்ற

மற்ற அன்புடனே சகோதரராகக் கொள்ளக்கடவீர். சோதரர் எனப் பலர்பாலிற் சொல்லியிருப்பதால் ஆண்பால் பெண்பாலை உள்ளடக்கிநின்றது அவ்வாறு கொள்ள வேண்டுமிடத்து ஆண்மகனைச் சகோதர னென்றும், பெண்மகளைச் சகோதரி யென்றுங் கொள்க.

பொய்த்தல், மாயஞ்செய்தல் இவற்றையுடைய மனத்தை நீக்கித் தந்திரமான வார்த்தையும், கொடியமனத்தையும் விட்டொழித்து பெரியோர்கள் நடந்தவிதமே பொய்சொல்லாது நீங்கி எப்போழ்தும் உண்மைபேசக் கடவீர். உலகத்தவர்களே உண்மைபேசக் கடவீர்.

(ஒருவருக்கு) தீங்கு செய்யும்படியாகவே முன் எழுந்துசென்று பின் அதனால் வருந்தாமல், மிக்கபசியுடையோர்க்கு விருப்பத்துடனே சாதத்தையும், தாகமுள்ளவர்கட்குச் சந்தோஷத்துடன் தண்ணீரும், பிணியால் வருந்துகின்றவர்க்கு இனிய மருந்தையும், தரித்திரற்கு உணக்குக் கிடைத்த அளவில் சாசையும், கல்வியில்லார்க்கு அது முற்றும் வண்ணம் சொல்லுதலையும், ஈசுவரபத்தி யில்லார்க்கு அந்தப்பத்தி பொருந்துதலையும் விரைவிலேசெய்து நல்லரா யிருக்கக்கடவீர்; யாவர்க்கும் நல்லரா யிருக்கக்கடவீர்.

அந்நியரது மிக்க செல்வம், மகிழ்ச்சி, பெருமை இவற்றைக் கெடுக்க நினையாமல் அவர் தங்கட்கு உரித்தானவைகளை நெருப்பென நினைந்து நீங்கி அதனுடன் சாராமல் உலகத்தின்கண் நியாயமாக நடக்கக்கடவீர்; பரிசுத்த மார்க்கத்தொழுகக் கருதினால் நியாயமாக நடக்கக்கடவீர்.

(ஒருவர் உம்மைநோக்கி) நிந்தைசொல்லின் இனியசொற்களைச் சொல்லி (அவர்களைத்) தழுவிக்கொண்டும், திட்டினகாலத்து அதற்பதில் திட்டாமலும், காரணமுளதாகிய பகையைக்கண்ட இடத்துக்கோபியாது சந்தோஷத்தையடைந்து பூமியில் எப்பொழுதும் பொறையுடையரா யிருக்கக்கடவீர்; இ

நிதபொழுதும் கோபியாமல் பொறையுடையரா யிருக்கக்க டவீர்.

(ஒருத்தி நல்ல) குணத்திலும், (மிக்க) அழகிலும் விளங்கக் கண்டகாலத்து விவாகஞ் செய்துகொண்டவள் அல்லாதவளாகில் பார்வையினாலும், நினைப்பினாலும் வந்தடையும் விருப்பத்தைநீக்கி மேலெழுந்து வருகின்ற மனத்தை யடக்கக்கடவீர்; விஷத்தினுங் கொடியதாகிய மனத்தை யடக்கக்கடவீர்.

தாய்தந்தையர்களைத் தெய்வமாகவே மதித்து வந்தனை வழிபாடுகள் செய்து, ஆசாரியருடைய சொற்கமைந்து அவரை வணங்கி ஆத்தும விசாரணையைத் தருகின்ற பெரியோர், புலவர், தம்வயதின் முதிர்ந்தோர் இவர்கட்கு முன்னர் வந்தனை செலுத்திச் சகோதரர்களிடத்து மிக்க அன்புவைத்துத், தம் புதல்வர்களைத் தம்மை யொப்ப ஆதரித்து, இரண்டுகண்களும் ஒருபொருளை ஒன்றுசேர்ந்து காண்பதுபோல மனைவியோடுமனமொத்துப் பூமியின்கண் உம்முடைய இல்வாழ்க்கைக்குரிய அறங்களைச் செய்யக்கடவீர்; இல்வாழ்க்கைக்குரிய அறங்களைச் செய்யக் கடவீர்; இஃது அல்லாதது துறவறம் நல்ல அறம் அன்றென்று பெரியோர் சொல்லுவர் எ-று. (கசு)

அத்தியான் மிகயோ கத்தையுமதனாற்
பெற்றிடும் பரிசு முற்றுரைக்கின்றது.

பஃறொடைவெண்பா.

ந்தமன மறிவு நல்லன் பிவை யொருங் சே
ரந்தை யொடுபொருத்தி யெந்தையின்கண் சுந்தரமார்
ிவான் மாவைப் பொருந்துந் தீக்கையுற்றுயர்ந்தோ
ரத், தேவர் பெரிய ரெனத் தேர்ந்துரைப்பாரீண்டிது
வ, அத்யான்மிக யோகமாம்.

(பொ-ளை.) எம்பிரான் (மனம், அறிவு, அன்புஆகிய இவை ளோடு) நமது மனம் அறிவு, அன்பு, ஆகிய இவைகளைச் சேக

ர்த்து, அப்பரமாத்துமாவினிடத்து அழகுநிறைந்த ஜீவாத்து மாவைச் சேர்த்துவைக்கத்தக்க உபதேசத்தைப் பெற்றுஅதி ற்சிறந்தவர்களைத் தேவர்கள் பெரியவர்கள் எனத்தெளிந்து கூறுகிற்பர்கள். இவ்விதமாகிய இந்த உபதேசத்திற்குத் தான் அத்தியான்மிக யோகமென்று பெயர் ஆம் எ-று. (கரு)

## மூப்பொருள்விளக்கஞ் செப்புகின்றது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பதிபசுபாசமென்ப ரோர் சாரார் பகருமிக்கருத்தினை ப்பதித்தே, விதித்தவீச்சுரன் சித்தசித்தெனமொழிவா ர்வேறுசாராரிவர்மதத்தைக், கதித்துறவிளக்கிற்சீவன் மாயையினிற் கலந்துளனவனதை யொழித்துத், துதி கொளீஇப்பரம னருளடிநிழலிற்றேன்றி வாழ்ந்திடுவ னென்பதுவாம்.

(பொ-ரை.) ஒருபட்சத்தார், பதி, பசு, பாசம் என்றுசொ ல்வார்கள். இந்தக் கருத்தை அமைத்தே வேறொருபட்சத்தார் ஈசுவரன், சித்து, அசித்து என்று சொல்வார்கள். இங்ஙனஞ் சொல்பவர்களது) கொள்கைகளை மிகுதியும் ஆராய்ந்து பார் க்குமிடத்து"பசு அல்லது சித்தென்கிற ஜீவனுனவன் பாசம் அல்லது அசித்துஎன்கிற மாயையிற் கலந்திருக்கின்றான் அந்த ச்சீவன் அக்கடவுளருளால் (அவனது) தியான மார்க்கத்தை க் கொண்டு அம்மாயையினின்றும் நீங்கப் பரமேசுரனது அருளாகியதிருவடிநீழலில் விளங்கிச் சீவித்திருப்பான்" என் று சொல்வதாகும் எ-று. (கசு)

## ஓமெனும்பதத்தை யுபயோகிக்கும் வாம நெறியை வழுத்துகின்றது.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

படைத் தளித்துத்துடைக்கவல்ல பரமன் பேரைப்
பகர்ந்த மொழி யோமென்னும் பதமாமீதே

அடற்சிலையென்றுன்னியுயிர் சரத்தினெண்ணி
யமுது தரும் பரிசுடைய ரூன்றேன்றன்னை
அடைதற்காங்குறிப்பிடமென்றறிந்து நெஞ்சே
யான்மாவைப் பரமான்மாவினிற் பொருத்தாய்
கடைப்பட்டவுலக நெறி யாலென்னீதான்
கண்டனையீ துன்னையறக் கருக்குந்தானே.

(பொ-ரை.) (அகார, உகார, மகாரங்களாலமைந்த) ஓம் என்னும் பதமானது (சராசரங்களை) உண்டாக்கிக் காத்து அழிக்கவல்ல தேவதேவனது திருநாமத்தையே குறித்த சொல்லாகும். இந்தப் பதத்தை வலியமைந்த வில்லாகக்கொண்டு, ஆத்துமாவைச் சரமாகக்கருதி, மோக்ஷத்தைத் தரத்தக்க கடவுளை அடைதற்குக்குறித்த இடமென்றுஅறிந்து, ஒ மனமே, நமது ஆத்துமாவைப் பரமாத்மாவிற் சேர்க்கக் கடவாய். (இது நீங்கிய) இழிவாகிய லௌகிக காரியங்களால் நீகண்ட பலன் என்ன? இந்த லௌகிக காரியம் உன்னை முழுதும் நாசப்படுத்துமே எ-று. (கள)

ஆன்மவிசார மேன்மையென்றது.

இரட்டையாசிரியவிருத்தம்.

மலைகானிருக்கலா நதிகேணிமூழ்கலா
மன்னு நீறும் பூசலாம்
மலிகாவிவத்திரம் புலியதளுடுக்கலாம்
வன்குறடடிக் கொள்ளலாம்
கலையாதி வேதமுங் கற்கலா மின்பமாக்
கான கீதம்பாட லாங் [ண்டு
கவிசொல்ல லாகும் வெளிவேடமாமிவை கொ
கழறு பய னேது பெறுவார்.
நிலையாய பேரறிவியாதெனத் தேசிகனை
நேடியன்னோன் றெரிக்கு

நெறிநின்று தீயவினைபுரியாது நெஞ்சகம்
வசநிற்க நிறுவவல்லோர்
அலையார் துரும்பெனச்சமுசாரசாகரத்
தலையுமவர்போற் காணினு
மல்லார்களல்லார்கள் சொல்லாருமிருமையினு
மாநந்த மெய்து பவரோ.

(பொ-ரை.) மலையிலும் காட்டிலும் வாசஞ்செய்யலாம், நதிகளிலுங் குளங்களிலும் ஸ்நானஞ்செய்யலாம், (தேகமுழுமையும்) நீற்றை உத்தூளனஞ்செய்துகொள்ளலாம், நிறம்விளங்கிய காவிவஸ்திரத்தையும் புலித்தோலையும் ஆடையாகத்தரித்துக்கொள்ளலாம், அடியிற் குறடுபூண்டு நடக்கலாம், வேதமுதலிய சாஸ்திரங்களையும் அத்தியயனம் பண்ணலாம், (கேட்போர்செவிக்கு) இன்பமாக இசையோடுகூடிய சங்கீதம்பாடக் கற்றுக் கொள்ளலாம், (புலமைத்திறத்தால்) கவிகள் செய்யலாம், (இவையாவும் பழக்கத்தாற்செய்துகொள்ளத்தக்கன) வெளிவேஷமாகிய இவற்றால் (சித்திபெற்றோர்) சொல்லிய பிரயோசனம் யாதுஅடைவார்கள் (ஒன்றுமடையார்) அழியாத பரமாத்மாவாகிய கடவுள் யாவர் என்று ஞானசாரியைத்தேடி (அடைந்து) அவர் அறிவிக்கும் சன்மார்க்கத்தில் நிலைத்திருந்து பாவகாரியங்களொன்றுஞ் செய்யாதொழிந்து மனம் தம் வசப்பட்டுநிற்க நிறுத்தவல்லவர்கள், அலையிற்பட்டதுரும்பென்று சொல்லும்படி சமுசாரமாகிய கடலில்மூழ்கி அலையுமவர்போலக் காணப்பட்டாராயினும் (அவ்வாறுஅலைபவர்) அல்லாதவர்களாகிச் சொல்லப்பட்ட இம்மை மறுமையாகிய இரண்டிலும் ஆநந்தம் பெறுதற்குரியவர்களேயாவர்எ-று. ()

வீண்செயலாற்பயன் காண்பரிதென்றது.

கலிவிருத்தம்.

தலைம ழிக்கிலென் றாழ்சடை நீட்டிலென்
தலைய நீறோடு நாமந் தரிக்கிலென்
குலையக் கானங் குகைக்குடி யாகிலென்
அலைம னம்வசத் தாக்க லமையுமே.

(பொ-ரை.) (மனத்தையடக்கச் சத்தியில்லாதார்) தலையை முண்டிதஞ்செய்தால் தான் என்ன? வளர்தற்குரிய சடையை வளர்த்தால்தான் என்ன? தலைமையாகிய விபூதியோடு நாமத்தைத் தரித்தால்தான் என்ன? (கண்டோர் அஞ்சும்படி) காட்டிலும் குகையிலும் வாசஞ்செய்தால்தான்என்ன? அவற்றாற் பெறும்பய னொன்றுமில்லை, அலைகின்ற மனத்தைத் தம்வசமாக்கல் ஒன்றுமே போதுமானதாகும் எ-று.

மனத்தைத் தம்வசப்படுத்திய பெரியோர்க்கு மழித்தல் நீட்டல் முதலியன வேண்டாவென்பதாம். (கக)

இதுவுமது.

நேரிசைவெண்பா.

நேசித்துப் பத்திரந்தண் ணீர்கைக் கொடுசிலையைப்
பூசிக்கிற் றீவினைகள் போகுமோ - மாசற்ற
ஞானவடி வத்தனென நான்மறைகள் பேசியுநீர்
ஈனவடி வைத்துநிப்ப தென்.

(பொ-ரை.) விசுவாசத்துடனே பத்திராதி புஷ்பங்களையும் சுத்தோதகமாதி திருமஞ்சனவஸ்துக்களையுங் கையிற்கொண்டு போய்ப் பிம்பங்களைப் பூசனைசெய்வதாற் பாவங்கள் போய்விடுமா? (போகாதுவ்வீசன்) ஞானசொரூபன் என்று நான்குவேதங்களும் முறையிட்டும், நீங்கள் அற்பமாகிய இந்த உருவங்களை உபாசிப்பது யாதுகருதி எ-று. (உ0)

சொல்வழியாராய் வில்லையென்றது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தொல்புவிவாழுமாந்தர் தோமற விதைத்தவாறே
பல்வகை முளையுந் தோன்றும் படியினிலென்பரவ்வா
றெல்குதம்வினைகட்கேற்ப வுற்றுளதென்னுமாராய்
வில்கருத்துள்ளதாயி னென்னையாமிகபரத்தே.

(பொ-ரை.) பழமையாகிய உலகத்தில் வாழ்கின்ற ஜனங்கள் பூமியின்கண் (ஒருவன்) குற்றமற விதைத்தபடியே (அப்பலவகை வித்துக்கள்) பலவகையான முளைகளோடு கூடிக் காணப்படும் என்பார்கள். அவ்விதமே தாங்கள் தங்களது வினைகளுக்கொப்ப (ஓரிடம்) அமைந்திருக்கும் என்னும் ஆராய்வில்லாத கருத்து உளதாயின், (அவர்கட்கு) இகத்திலும் பரத்திலும் யாது பயனுளதாம் எ-று. (உக)

ஞானியர்நெறியறி வானவில்கின்றது.

இதுவுமது.

மாத்திரப் பொழுதி லேனும் வாமனனருளடிக்கீழ்ச்
சேர்த்திடக் குறியார் சேர்க்கிற் றிகழு மெய்ஞ்ஞானியாவார், கோத்தபொய்ம்மயக்குநீத்துக் குறியொன்று மில்லாஞான, மூர்த்தியைப் போற்றித்தத்த முண்டகமனத்தை யன்றே.

(பொ-ரை.) (தம்மை) சூழ்ந்த பொய்யாகிய மயக்குகளை நீக்கி, (இப்படிப்பட்டவரென) குறித்துச் சொல்லுதற்கில்லாத ஞானசொரூபனைத் துதிசெய்து தந்தமது தாமரைமலர்போன்ற இருதயத்தை அழகிய கடவுளது அருளாகிய பதத்தின்கீழ் மாத்திரைப்பொழுதளவேனும் சேர்க்கக் கருதார், சேர்த்தால் விளங்குகின்ற மெய்ஞ்ஞானியாவார்கள் எ-று. (உஉ)

சன்மார்க்கரவி சாரணையாலொரு
நன்மையு மிலையென நவிலுகின்றது

இதுவுமது.

ஞானியாரெனைப்படைத்த நாயகன்யாரோதுக்கு, மாநிலத் திடையேவந்தேன் வினைவன வெவனென்றுன்

ஞ, தினமார் சன்மமின்னு மில்லையுண் டென்னு மாற்
றம், ஏனகிலத்தீர் கூலிக் கேகினேனென நிற்பீரோ.

(பொ-ரை.) நான் யார்? என்னைச் சிருட்டித்த தலைவன் யார்? யான் யாதுநிமித்தம் இப்பூமியிற் பிறந்திருக்கிறேன்? யான் செய்யத்தக்கவைகள் யாவை? என்று விசாரணைசெய்யாமல் இழிவாகிய இந்தச் சன்மம், (இப்போதெடுத்ததுபோல) இதற்கு முன்னும்இல்லை; இனிமேலும் இல்லை; இதற்கு முன்னும் உண்டு, இனிமேலும் உண்டு என்று சொல்லுகிற (உமது) சொல் ஏதுக்கு ஓ உலகத்தவர்களே! (முற்கூறிய விசாரணைக்குள்ளாகி அவ்விசாரணையில் தேர்ந்தபடி நமது செய்கைகளுக்கு உரியபலனை) கூலிவேலைசெய்தற்குச் சென்றவன் அது செய்து முடித்துக் கூலிக்கு எதிர்பார்த்திருப்பது போல நாடியிருங்கள் எ-று.

ஜீவனுக்குச் சன்மாந்தரம்உண்டு இல்லை என்னும் வீண்வாதஞ்செய்யற்க. (உங)

அளிக்குணத்திம்பரை விளித்தல் செய்கின்றது.

கட்டளைக்கலித்துறை.

காக மினத்திற் கரவா திருந்துணக் கண்டனமுச் [ப்
சாகத் தொடுசுக வாரியைப் பேரின்பத் தண்ணமுதை
பாகினை முக்கனி யைக்கண்டை யங்ஙனம் பாத்தருந்த
வேகத் தொடுவரு வீர்சகத் தீரிதென் விண்ணப்பமே.

(பொ-ரை.) ஓ உலகத்தவர்களே! காகமானது ஒளியாமல் இனத்துடனே இருந்து உண்ணுதலை நாம்பார்த்திருக்கிறோம்; அதுபோல, சுகக்கடலாகியும் பேரின்பமாகிய குளிர்ந்த அமிர்தமாகியும் பாகாகியும் முக்கனி யாகியும் கற்கண் டாகியும் (சிந்தித்தபோழ்தே இன்பத்தைத் தருதற்கு) உள்ள கடவுளைச் சந்தோஷத்துடனே (கொள்ளைகொண்டு) பகுத்துஉண்ண விரைவில்வரக் கடவீர்கள். இதுதான் அடியேனது விண்ணப்பமாகும் எ-று. (உச)

வல்ல தேவின்புகழ் சொல்லரிதென்றது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பன்னிய வேத மற்றுள வறிஞர் பார்வளி யழல்வெளி யப்பின், மன்னிய வசர சரங்களு நினது மட்டிலாப் பெரும்புகழ் விரிப்பான், துன்னிய வன்மை யடைந்தில வாயிற் சொல்லுமா றெங்ஙன்யான் சொல்லாய், வின்னமி லமல வித்தகா சுத்த மெய்த்தவ ரகத்துறை விபுவே.

(பொ-ரை.) கெடுதலில்லாத மலரகிதனே, ஞானசொரூபியே, பரிசுத்தமாகிய உண்மைத்தவமுடைய ஞானிகளது இருதயத்தில் வசிக்கின்ற தலைவனே, உனது அளவற்ற பெரும்புகழை விரிவாக எடுத்துச் சொல்ல, வேதங்களும், ஞானிகளும், ஐம்பூதங்களும், அவற்றுலாய சராசரங்களும் வலியனவல்ல ஆனால் அடியேன் சொல்வது எவ்விதம் திருவாய்மலர்ந்தருள வேண்டும் எ-று. (உரு)

ஆரணம்வழுத்துங் காரணநாமனை
மனமொழிவாக்கொடு நினைத்துமென்றது.

நேரிசை யாசிரியப்பா.

அசல னச்சய னமல னதிகுணன்
விசய னெம்வினை விநாசன் வேதா
சச்சிதா நந்தன் றனிக்கோற் சாமி
முச்சக முதல்வன் முழுதொருங் குணர்ந்தோன்
இறையோ னீறிலி யீச்சுர னேகன்
நிறையோ னிரம்பர னிரந்தர னிரஞ்சனன்
கருத்தன் கடவுள் கருணா லயனரி
அருத்த னதிப னருட்குடை யாளன்
அச்சுத னநல னதிருசி யனந்தன்
நிச்சய னித்த னிநாம னிருபன்

ஐம்புலத் தடங்கா னகண்டா கண்டன்
சம்பு சதாசிவன் சர்வ வியாபி
ஆதி யநாதி யகநிலை யநகன்
நீதி புங்கவ னிராமய னிதானன்
சீபதி சோதி தேவ தேவன்
பாப ரகிதன் பரன்சீர்ப் பராபரன்
உள்ளத் துறைவோ னென்னுஞ் சொல்லான்
தள்ளற் கரியான் றுபரன் றற்பரன்
மூத்தி நாதன் மூவா முன்னோன்
வித்தகன் விதித்தோன் விட்டுணு மோலோன்
பரமன் பகாப்பொருள் பகவன் பூரணன்
பிரம னெம்பிரான் பிறப்பிறப் பில்லான்
பத்தற் கருள்வோன் பாதுக் கதுக்கன்
இத்தகைக் காரண மேற்ற சொரூபனே
கடவு ளவனையெக் காலும்
உடன்மனவாக்கொடு மூவந்துபோற் றுதுமே.

(பொ-ரை.) அசைவில்லானாகியும், கேடில்லானாகியும், மலர கிதனாகியும், சற்குணனாகியும், ஜெயசீலனாகியும், எமது பாவத்தை யொழிப்பவனாகியும், வேதத்திற் குரியோனாகியும், உண்மையோடறிய இன்பத்தைத்தருபவனாகியும், ஒப்பற்ற செல்வியகோலையுடைய தலைவனாகியும், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் இவற்றிற்குச் சிரேஷ்டனாகியும், எல்லாம் ஒருங்கே அறியத்தக்கவல்லோனாகியும், எப்பொருட்குந் தலைவனாகியும், முடிவில்லானாகியும், ஐசுவரியத்தைத் தருபவனாகியும் ஏகனாகியும், நிறைந்தவனாகியும், திசைகளைக்கடந்தோனாகியும், என்றுமுள்ளவனாகியும், குற்றமில்லானாகியும், செய்பவனாகியும், அந்தரியாமியாகியும், கிருபைக்கு வீடுபோன்றோனாகியும், பாபத்தை அரிப்பவனாகியும், (சொல்லின்) பொருட்கு உரியோனாகியும், அதிகாரமுடையவனாகியும், கிருபையைக்குடையாக உ

டையோனாகியும், மாறுதவனாகியும், சமானரகிதனாகியும், ஐம்பொறிகட்கும் எட்டானாகியும், தந்தையாகியும், மெய்யோனாகியும், அழியாதுள்ளவனாகியும், (இடுகுறியாக) பேரில்லானாகியும், அரசனாகியும், ஐம்புலன்களினும் அடங்கானாகியும், எல்லாமானவனாகியும், தானேதோன்றினவனாகியும், எப்போழ்தும்உள்ள மங்களஸ்வரூபனாகியும், எங்கும் நிறைந்தவனாகியும், தொடக்கத்தோனாகியும், தொடக்கத்துமில்லோனாகியும், இருதயவாசியாகியும், பாவமில்லானாகியும், நியாயமுள்ளோனாகியும், உயர்ந்தோனாகியும், துன்பமில்லோனாகியும், (எவற்றிற்கும்) ஆதிகாரணனாகியும், வேதநாயகனாகியும், மிக்கவொளியுள்ளோனாகியும், தேவர்நாயகனாகியும், தீவினையினின்றும் நீங்கினோனாகியும், தூரமானவனாகியும், தூரமானவனும் தூரமில்லாதவனுமாகியும், நினைவில்வடிவனாகியும், * அகார உகார மகாரங்களாலமைந்த ஓமென்னும் பதத்திற்குரியவனாகியும், (நம்மால்) நீக்குதற்குக்கூடாதவனாகியும், ஜகற்சொரூபனாகியும், தனக்குவேறுகத்தலைவனை யில்லாதவனாகியும், மோட்சந்தர வல்லவனாகியும், விலகாது முன்னிற்போனாகியும், ஞானசொரூபனாகியும், நியமிப்போனாகியும், எங்குஞ்சென்றுறைவோனாகியும், பெருமையை யுடையோனாகியும், சிரேஷ்டனாகியும், பிறித்து அறியக்கூடாத வஸ்துவாகியும், எல்லாம் உடையனாகியும், தானில்லாத இடம் இல்லாதவனாகியும், எல்லாவற்றிலுங் காணப்படுவோனாகியும், நம் தலைவனாகியும், ஜனனமரணமில்லானாகியும், அன்பர்க்கருள்பவனாகியும், மிக்க தயாளனாகியும்உள்ள இத்தன்மையான காரணங்களைப்பெற்ற சற்சொரூபனே எம்மால் துதிக்கப்படும் தேவனாகும்; அத்தேவனை அநவரதமும் மனோவாக்குக்காயங்களால் துதிசெய்வோம் எ-று.

சிலர் ஈண்டுச்சொல்லப்பட்ட கடவுளது திவ்வியநாமங்களுள் ஒன்று மற்றொன்றைப் பொருளால் ஒத்திருக்கின்றதெ

---

* ௧௩, ௧௭ - ம் செய்யுள்களால் இதன்பொருள் விளங்கியேயுள்ளதுகாண்க.

ன்று மயங்குவார். அங்ஙனம் அன்று ஆழ்ந்து ஆராயின் அரு த்தத்தால் வேற்றுமைதோன்றும். அவற்றை விரிப்பான் புகி ன்மேற்கோளோடு தரங்கம்போன்று எழும்; ஆகவே விரிவஞ் சிவனாந்திலம் என்று அறிக. (உகூ)

## குணங்குடியானை வணங்குதுமென்றது.

கொச்சகக்கலிப்பா.

ஆக்கியளித்தழிக்கும் பேராற்றலுடையனெவன்
தேக்கியுலகம்மூன்றுந்திகழ்ந்தினருளீவனெவன்
போக்கும் வரவுமிலாப்புண்யவருண்மூர்த்தியெவன்
மாக்கடன்ஞாலத்தவன்றன்மலர்த்தாளைவணங்குதுமே

(பொ-ரை.) (யாவையும்) படைத்துக்காத்து (முடிவில்) லய ப்படுத்திக்கொள்ளும் வல்லமையுடையவன் எவன்? மூவுலகத் திலும் நிறைந்து விளங்கிக் கிருபையாலிப்பவன் எவன்? இறப் பும் பிறப்புமில்லாத புண்ணிய கிருபாசொரூபன் எவன்? பெரி யகடல்சூழ்ந்த உலகின்கண் அவனது தாமரைமலர்போன்ற திருவடிகளையே வணங்குவாம் எ-று. (உஎ)

## இதுவுமது.

விரிகதிர்ச்சூரியனைமிளிர் வெண்கதிர்ச்சந்திரனை
சொரிமழைமா மூகிலையொளி தோய் நற்பன்னுண்மீனை
பரிவின்விதித்தந்தப் படைப்பாதிகாரணனை
வரிவளைதண்புவியதனில் வாழ்த்திவணங்குதுமே.

(பொ-ரை.) விரிந்த கிரணங்களையுடைய சூரியனையும், விள ங்குகின்ற கிரணங்களையுடைய வெண்மையாகிய சந்திரனையு ம், மழையைச்சொரிகின்ற பெருமைபொருந்திய மேகத்தை யும், ஒளிபொருந்திய நன்மையாகிய பலவாகிய நட்சத்திரங் களையும் பிரியத்துடனே நியமித்துவைத்து அந்தப் படைப்பு கட்கும் அதுமுதலாகவுள்ள மற்றியாவைக்கும் காரணமாகவு ள்ளவனை கடல்சூழ்ந்த திண்ணிய உலகத்தில் வாழ்த்திவணங் குவோம் எ-று. (உஅ)

இதுவுமது.

நன்னேயத்துடனே யெந் நாளுமெமை யாண்டவனே, அன்னே யென்றும்பொதுவாமத்தா வென்றும்மொளி சேர், பொன்னே யென்றும் பொல்லாமாமணியேயெ ன்றுமெழில், மன்னேயென்றுஞ் சொல்லிவாழ்த்திவ ணங்குதுமே.

(பொ-ரை.) எப்பொழுதும் எம்மை அடிமையாகக்கொண்ட கடவுளைத் தாயேயென்றும், பொதுவான தந்தையேயென்றும், பிரகாசிக்கின்ற பொன்னேயென்றும், தொளைபடாத (பெரிய) மாணிக்கமேயென்றும், அழகியதலைவனேயென்றுஞ்சொல்லிவாழ்த்தி வணங்குவோம் எ-று. (உக)

தொடக்கமீறிலலாற் கடைக்கல மென்றது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நன்றே நலத்திற் கொருமுதலே நவிலுமுயர் வொப்பில்லாத, ஒன்றே யுயிருக் குயிரான வுணர்வே மேலாங் குணநிறைந்த, குன்றே கொடியே னுங்கொடிக்குக் கொழுகொம்பெனவேநின்றாயே, இன்றே யன்றி யெஞ்ஞான்று மெளியேனுன்றனடைக்கலமே.

(பொ-ரை) நன்மையாகிய சொருபனே நன்மையாவற்றிற்குங் காரணனே சொல்லுகின்ற (தனக்கு) ஒப்புயர்வில்லாத ஏகநாயகனே, (என்) உயிர்க்குயிராக உள்ள ஞானசொருபனே பெருமைபொருந்திய சற்குணநிறைந்த மலைக்கொப்பானவனே, கொடுமையையுடையேனுகிய கொடிபோற்றுவளுகின்ற எனக்குக்கொழு கொம்புபோன்றவனே இன்றைத்தினமாத்திரமன்றியெப்பொழுதும் எளியேன் உன்னடைக்கலம் எ-று. ()

இதுவுமது.

வேதப் பொருளே விழுப் பொருளேவிண்ணோர்க்கிறையே வித்தகமே, நீதப்பொருளே நித்தியமே நிமலானந்த நிண்ணயமே, நீதற்றுயருஞ் செழும்பாகே தெவி

ட்டாத்தேனே தெள்ளமுதே, ஆதத்தெனைநீ வருகெ
ன்றுயடியேனுன்ற னடைக்கலமே.

(பொ-ரை.) வேதார்த்தசொரூபனே சிறந்தவஸ்துவே, தே வதேவனே ஞானசொரூபனே, நியாயமாகிய குணத்தையுடை யவனே, என்றுமுள்ளவனே, குற்றமற்ற ஆநந்தமெய்ப்பொரு ளே, கெடுதலில்லாத மேலாகிய செழித்த பாருக்கு ஒப்பான வனே, தெவிட்டுதலில்லாத தேனுக்கொப்பானவனே, தெள்ளி ய அமிர்தத்திற்கு ஒப்பானவனே, விருப்பத்துடனே அடியே னை வருகவென் றழைப்பாயாக. அடியேன் உன்னடைக்கலம் எ-று. (௩௧)

வாழி.

நேரிசைவெண்பா.

நிகழ்த்துந் தமிழ்நிகம நிச்சயமா மிந்நூல்
மதிக்கண்ணே வாழியதில் வாய்ந்த – சுகக்கடலான்
வாழி யிதைப்படித்தோர் வாழி தெரிந்துரைத்தோர்
வாழிநீ டூழியள வாய்.

நிகமநிச்சயம் முற்றிற்று.